இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 07-07-2025

# இலங்கை அரசிடம் இந்திய அரசு பேச வேண்டும்!

கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத் தர மாட்டோம் என்று இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத் திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கிறார். இந்திய மீனவர்கள் மீது அவதூறான கருத்துகளை ஆணவமாகத் தெரிவித்து இருக்கிறார்.

“கச்சத்தீவு கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்காக இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்றனர். அவர்கள் மீன் வளங்களைக் கொள்ளையடிப்பதோடு கடல் தாவரங்களையும் கடுமையாக சேதப்படுத்துகின்றனர். இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்து சட்டவிரோதமாக மீன் பிடிப்பதற்கு இந்திய அரசும் ஆதரவளிக்கவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம். இந்தப் பிரச்சினைக்கு தூதகர ரீதியில் தீர்வு காண இலங்கை தயாராக உள்ளது. சர்வதேச சட்டங்களின் படி நிறுவப்பட்ட கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத் தர மாட்டோம். இந்தியாவில் காங்கிரஸ், பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் அரசியல் காரணங்களுக்காகவே கச்சத்தீவு விவகாரத்தை எழுப்புகின்றன” என்று வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி இருக்கிறார் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத்.

கச்சத்தீவு மீட்கப்பட வேண்டும் என்பதை அரசியல் காரணங்களுக்காக எழுப்பவில்லை. இந்திய மீனவர்களின் வாழ்வுரிமையின் அடிப்படையில்தான் எழுப்புகிறோம். கடல் தாண்டி வந்ததாகச் சொல்லி இந்திய மீனவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதையும், படகுகளை பறிமுதல் செய்வதையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கு லட்சக்கணக்கில் அபராதம் போடுவதையும் இலங்கை அரசு தொடர்ச்சியாகச் செய்து வருகிறது. கைது செய்வதும், அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசானது இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதும், இந்திய அரசு உடனடியாக இலங்கை அரசுக்கு கோரிக்கை விடுப்பதும் தொடர்ந்து நடக்கிறது. ஆனாலும் கைது நடவடிக்கையை இலங்கை நிறுத்தவில்லை.

**இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழையவில்லை. இலங்கையின் மீன் வளங்களை கொள்ளையடிப்பது இல்லை. இந்திய மீனவர்கள் வைத்திருக்கும் மீன்கள்தான் சிங்கள கடற்படையால் பறிக்கப்படுகிறது. மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுகிறது. நமது மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். இதன் உச்சமாகச் சிலர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். பலர் கைதாகி கொண்டு செல்லப்படுகிறார்கள். இவை அனைத்தும் ரகசியமாக நடப்பவை அல்ல. வெளிப்படையாகத்தான் நடக்கிறது. இதனை தமிழ்நாடு அரசு கண்டிப்பதைப் போல, இந்திய அரசு முதலில் கடுமையாகக் கண்டிக்க வேண்டும்.**

“இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்து சட்டவிரோதமாக மீன் பிடிப்பதற்கு இந்திய அரசும் ஆதரவளிக்கவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம்” என்கிறார் இலங்கை அமைச்சர். தங்களின் கொடூரத்துக்கு இந்திய அரசையும் பங்குதாரர் ஆக்கும் முயற்சி இது. இலங்கை அமைச்சரின் இந்தக் கூற்றை பா.ஜ.க. அரசு உடனடியாக மறுக்க வேண்டும். ‘இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக மீன் பிடிக்கவில்லை’ என்பதை பா.ஜ.க. அரசு உறுதி செய்து இலங்கை அரசுக்கு கடிதம் அனுப்ப வேண்டும். இன்னொரு நாட்டின் அமைச்சர், இந்திய மீனவர்கள் மீது அவதூறான, வஞ்சம் தீர்க்கும், பழி சொல்லும் குற்றச்சாட்டுகளை வைக்கும் போது அதனை மறுக்க வேண்டிய கடமை இந்திய அரசுக்கு இருக்கிறது.

**அதேபோல், கச்சத்தீவில் இந்தியாவின் உரிமையை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிலைநாட்டும் முயற்சிகளைத் தொடங்க வேண்டும். ‘கச்சத்தீவை தாரை வார்த்து விட்டார்கள்’ என்று பொங்கிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. அரசு. அது உண்மையாக இருந்தால் இலங்கை அரசுடன் கச்சத்தீவு தொடர்பான பேச்சுவார்த்தையை பிரதமர் மோடி அவர்கள் தொடங்க வேண்டும்.**

“கச்சத்தீவை தாரை வார்த்துக் கொடுத்தது குறித்த புதிய உண்மைகள் வெளிப்பட்டு உள்ளன. இது ஒவ்வொரு இந்தியனையும் கோபப்படுத்தி இருக்கிறது” என்று பிரதமர் மோடி அவர்கள் 31.3.2024 அன்று சொன்னார்கள். அது அவரது உண்மையான கோபமாக இருந்தால், இப்போது இலங்கை அமைச்சர் சொன்னதும் அவரைக் கோபம் கொள்ள வைத்திருக்க வேண்டும்.

“அன்றைய ஆளும் கட்சியின் அலட்சியத்தால் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது. இதனால் ஏழை மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். அந்தக் கட்சிகள் மீனவர்களை வஞ்சிக்கிறது. மீனவர்களுக்காக அவர்கள் எதையும் செய்யவில்லை. மீனவர்களுக்கு அவர்கள் துரோகம் செய்துள்ளனர்” என்று கண்ணீர் வடித்தார் பிரதமர் மோடி. இதோ, அவருக்கு ஒரு வாய்ப்பு வந்துள்ளது. மீனவர்களுக்கு நன்மை செய்ய ஒரு வாய்ப்பு வந்துள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்த வேண்டும்.

**“தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களுக்கும் கச்சத்தீவை மீண்டும் பெறுவதே நிரந்தரத் தீர்வாக அமையும். இதனை கருத்தில் கொண்டு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்” என்று இந்த சட்டமன்றப் பேரவை வலியுறுத்துகிறது என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்”** என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த முயற்சியை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடங்க வேண்டும்.

இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் பேச்சுக்கு இந்திய அரசு எதிர்வினை ஆற்ற வேண்டும். இந்திய மீனவர்கள் மீது குற்றம் சாட்டும் இலங்கை அமைச்சரை இந்திய அரசு கண்டிக்க வேண்டும். கச்சத்தீவின் இந்திய உரிமையை நிலைநாட்ட பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும்.

**செய்யுமா ஒன்றிய பா.ஜ.க. அரசு?**

## கழக இளைஞர் அணிச் செயலாளர்– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!



கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சமூக வலைத்தளப் பணிகளை ஒருங்கிணைக்கும் விதமாக தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழக மாவட்டத்துக்கு ஒரு துணை அமைப்பாளர்கள் நேர்காணல் செய்யப்பட்டு உரிய பரிந்துரையின் மூலம் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அந்த வகையில், இளைஞர் அணி மண்டலம் – 2–க்குட்பட்ட திருவள்ளூர் கிழக்கு – மத்திய – மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு – தெற்கு, விழுப்புரம் வடக்கு – மத்திய – தெற்கு, கடலூர் மேற்கு ஆகிய கழக மாவட்டங்களில் சமூக வலைத்தளத்துக்கென நியமிக்கப்பட்டுள்ள மாவட்டத் துணை அமைப்பாளர்கள் கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக் மற்றும் மண்டலம்–2–க்குட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள் உடன் இருந்தனர்.

### பா.ஜ.க.வுக்கு பேரதிர்ச்சி கொடுத்து உத்தவ் தாக்ரே தலைமையில்

# இந்தித் திணிப்புக்கு எதிராக மும்பையில் வெற்றிப் பேரணி - உற்சாகம் தருகிறது!

## ‘ஒன்றிணைவோம் வா’ என முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**சென்னை, ஜூலை 7 -**

**இந்தித் திணிப்புக்கு எதிராக மும்பையில் நடைபெற்ற வெற்றி பேரணி குறித்து தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

**தமிழ்நாட்டு மக்கள் நடத்தி வரும் மொழிப்போர்!**

இந்தித் திணிப்பை முறியடிக்க திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழ்நாட்டு மக்களும் தலைமுறை தலைமுறையாக நடத்திவரும் மொழி உரிமைப் போர், மாநில எல்லை களைக் கடந்து இப்போது மராட்டியத்தில் போராட்டச் சூறாவளியாகச் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் மூன்றாவது மொழியாக இந்தியைக் கற்பித்தால்தான் நிதியை ஒதுக்குவோம் என்று சட்டத்துக்குப் புறம்பாகவும் அராஜகமாக வும் நடந்துகொள்ளும் பாஜக, தாங்கள் ஆட்சி செய்யும் மகாராஷ்டிராவில் மக்கள் எழுச்சிக்கு அஞ்சி இரண்டாம் முறையாகப் பின்வாங்கி இருக்கிறார்கள்.

இந்தித் திணிப்புக்கு எதிராகச் சகோதரர் உத்தவ் அவர்கள் தலைமையில் இன்று மும்பையில் நடந்த வெற்றிக் கொண்டாட்டப் பேரணியின் எழுச்சியும், உரை வீச்சும் மிகுந்த உற்சாகம் தருகிறது.

**உ.பி.யில், ராஜஸ்தானிலும் மூன்றாவது மொழி என்ன?**

“உத்தர பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் கற்பிக்கப்படும் மூன்றாம் மொழி என்ன?” என்றும், “இந்தி பேசும் மாநிலங்கள் பின்தங்கி இருக்கின்றன இந்தி பேசாத முன்னேறிய மாநிலங்களின் மக்கள் மீது ஏன் இந்தியைத் திணிக்கிறீர்கள்?” என்றும் ராஜ் தாக்கரே அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு, இந்தியையும் சமஸ்கிருதத்தையும் வளர்ப்பதையே முழுநேர முன்னுரிமையாக வைத்திருக்கிற ஒன்றிய அரசிடம் எந்த பதிலும் இருக்காது என்பதை நன்றாக அறிவேன்.

> **“உத்தரபிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் கற்பிக்கப்படும் மூன்றாம் மொழி என்ன?” என்றும், “இந்தி பேசும் மாநிலங்கள் பின்தங்கி இருக்கின்றன இந்தி பேசாத முன்னேறிய மாநிலங்களின் மக்கள் மீது ஏன் இந்தியைத் திணிக்கிறீர்கள்?” என்றும் ராஜ் தாக்கரே அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு, இந்தியையும் சமஸ்கிருதத்தையும் வளர்ப்பதையே முழுநேர முன்னுரிமையாக வைத்திருக்கிற ஒன்றிய அரசிடம் எந்த பதிலும் இருக்காது என்பதை நன்றாக அறிவேன்.**

**இந்தி ஆதிக்கத்துக்கு எதிராக, அதிகாரப்பூர்வமான போராட்டம்!**

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தி சமஸ்கிருதத்தைத் திணிக்கும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ஒருங்கிணைந்த கல்வித் திட்ட (சமக்ர சிக்ஷா அபியான்) நிதி ரூ.2,152 கோடியை விடுவிப்போம் என்று தமிழ்நாட்டைப் பழிவாங்கும் போக்கை ஒன்றிய அரசு மாற்றிக் கொள்ளுமா? தமிழ்நாட்டுப் பள்ளிக் குழந்தைகளின் கல்விக்காகச் சட்டப்பூர்வமாக வழங்க வேண்டிய நிதியை உடனே விடுவிக்குமா?

இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழ்நாட்டு மக்கள் நடத்திவரும் போராட்டம் உணர்வுமயமானது மட்டுமல்ல, அறிவுப்பூர்வமானது! தர்க்கப்பூர்வமானது! இந்தியாவின் பன்மைக் கலாசாரத்தை பாதுகாப்பதற்கானது! வெறுப்பின்பாற்பட்டது அல்ல!

இந்தித் திணிப்பால் ஏராளமான இந்திய மொழிகள் அழிந்த வரலாற்றை அறியாமலும், இந்தியாவை இந்தி நாடாக்கும் செயல்திட்டத்தைப் புரிந்து கொள்ளாமலும், “இந்தி படித்தால் வேலை கிடைக்கும்” என்ற பசப்பு வார்த்தைகளைக் கிளிப்பிள்ளைகளைப் போல ஒப்பித்துக் கொண்டிருக்கும் இங்குள்ள அப்பாவிகள் சிலர், இனியாவது திருந்த வேண்டும். மராட்டியத்தின் எழுச்சி அவர்களின் அறிவுக் கண்களைத் திறக்கும்!

**தமிழ்நாடு பா.ஜ.க.வுக்கு மீண்டும் மறக்க முடியாத பாடத்தை கற்பிக்கும்!**

தமிழுக்கு நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனை, கீழடி நாகரிகத்தை அங்கீகரிக்க மறுக்கும் ஆணவம் நீடிக்க விட மாட்டோம். தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பா.ஜ.க. செய்துவரும் துரோகத்துக்கு பா.ஜ.க. பரிகாரம் தேட வேண்டும். இல்லையேல், அவர்களுக்கும் அவர்களது புதிய கூட்டாளிகளுக்கும் தமிழ்நாடு மறக்க முடியாத பாடத்தை மீண்டுமொரு முறை கற்பிக்கும்!

ஒன்றிணைவோம் வா!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.






மதுரை வடக்கு மாவட்டக் கழகம் சார்பாக திருப்பாலை பகுதியில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ – கட்டுப்பாட்டு கணினி அறை (வார் ரூம்மை) வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, திறந்து வைத்தார். மதுரை வடக்கு மாவட்டக் கழகம் சார்பாக மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி, மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி, சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி மற்றும் மேலூர் சட்டமன்றத் தொகுதி என கழக நிர்வாகிகள் பணியாற்றுகின்ற வகையில் கட்டுப்பாட்டு கணினி அறை (வார் ரூம்) அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், தொகுதிப் பார்வையாளர்கள் வ.து.ந.ஆனந்த், விஜயகதிரவன் ஆகியோர் உடன் இருந்தனர்.